**செய்தி வெளியீடு எண் : 1822** **நாள் : 18.10.2022**

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## ஆதிதிராவிடர் நலத்துறை மாணாக்கர்களுக்கு வெரைசான் (Verizon) நிறுவனம் CSR திட்டத்தின் கீழ் ரூ.44 இலட்சம் மதிப்புள்ள அறிவியல் ஆய்வு உபகரணங்கள் வழங்கும் விழா

சென்னை கன்னிகாபுரம் அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 14.10.2022 அன்று வெரைசான் (Verizon) நிறுவனத்தின் CSR திட்டத்தின் மூலம் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் 252 பள்ளிகளில் பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு அறிவியல் ஆய்வு உபகரணங்கள் வழங்கும் விழா மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் நல பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு ரூ.44 இலட்சம் மதிப்புள்ள அறிவியல் ஆய்வு உபகரணப்பெட்டிகளை வழங்கி, பள்ளி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த அறிவியல் கண்காட்சியை திறந்து வைத்து உரையாற்றினார். அறிவியல் ஆய்வு உபகரணப் பெட்டகத்தைக்கொண்டு 5ஆம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை உள்ள 126 பாடங்களில் 200 அறிவியல் பரிசோதனைகளை மாணவர்கள் தம் கைப்பட செய்து பார்த்து கற்றுணரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் மாணாக்கர்கள் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப துறையில் சாதனையாளர்களாக மிளிர வேண்டும் என்றும், பொதுத் தேர்வு செய்முறை தேர்வுகளை எளிதாக கையாண்டு நன்மதிப்பெண்களை பெறவும் மேலும் அரசால் வழங்கப்படும் மாணாக்கர் நலத்திட்டங்கள் பற்றியும் அதை நன்கு பயன்படுத்தி நலத்துறை மாணாக்கர்கள் ஒவ்வொருவரும் உயர் கல்வியில் அதிக முன்னேற்றம் கண்டு உயர்ந்த நிலையினை அனைவரும் அடைய வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. தாயகம் கவி அவர்கள் சிறப்புரை வழங்கினார்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு. தென்காசி சு. ஜவகர், இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு. த.ஆனந்த் இ.ஆ.ப., வெரைசான் இந்தியா, இயக்குநர், தலைவர் மற்றும் மனிதவள மேலாளர் திரு. கோபிநாத் புல்லைகாரி மற்றும் வெரைசான் இந்தியா, செயல் மற்றும் திட்ட இயக்குநர் திரு.அஸ்வின் லக்ஷ்மணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in